IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

O.S.NO. 40/2020

Deposition of Witness : PW-2

Name : குமரவேல்

Father's Name /W/o : த/பெ. கிருஷ்டப்ப ரெட்டியார்

Religion : இந்து

Caste : -

Calling : -

Address : நாகவேடு கிராமம், நெமிலி வட்டம்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day 18.01.2024

குறுக்கு விசாரணை தொடர்ச்சி: ( 1 ம் பிரதிவாதி தரப்பில்)

1. என்ன படித்துள்ளேன் என்றால் பழைய எஸ்எல்சி படித்துள்ளேன். வாதியின் தந்தை சுப்பிரமணிக்கு சொத்தை கிரையம் செய்த கிருஷ்ணனுக்கு சொத்து எப்படி வந்தது தெரியுமா என்றால் அது அவர் பூர்வீக சொத்து. கிருஷ்ணனுக்கு பூர்வீக சொத்து என்றால் கிருஷ்ணன் உடன்பிறந்தவர்கள் சேர்ந்துதான் கையெப்பமிட்டு கிரையம் கொடுத்திருக்கவேண்டும் என்றால் கிருஷ்ணன் அண்ணன் தம்பி சொத்தை வாச்சாவாக பிரித்துக்கொண்டு தனித்தனியாக பயிர் வைத்து அனுபவித்து வந்தார்கள். பாகப்பிரிவிணை பத்திரம் எழுதினார்களா என்றால் இல்லை. வாச்சாவாச தான் பிரித்துக்கொண்டார்கள். வாச்சாவாக பிரித்துக்கொண்ட சொத்து ஒருவர் மட்டும் பதிவு செய்ய இயலாது என்றாலும் அது செல்லாது என்றால் அந்த காலத்தில் அவ்வாறு இல்லை. அதைப்பற்றி தெரியவில்லை.

2. வழக்கு சம்பந்தபட்ட சர்வே எண்ணில் நானும் சொத்து வாங்கியுள்ளேன் என்றால் ஆம். இந்த வழக்கு சர்வே எண்ணில் எவ்வளவு சொத்து யாரிடம்

வாங்கினேன் என்றால் சரோஜம்மாள் என்பவரிடமிருந்து 4ல் 1 பாகம் வாங்கியுள்ளேன். மீதம் மூன்று பாகம் யாருடையது என்றால் 2 பாகம் கேசவன் மகன்கள் சுப்பிரமணி, கிருஷ்ணன், பெருமாள் ஆகியோர்களுடையது. மீதி 1 பாகம் ஆண்டியப்பன் மகன் மணி என்பவருடையது. 1996 ல் நான் கிரையம் பெறும்போது வாதியின் தந்தை சுப்பிரமணி பெயரோ, வாதியின் தந்தைக்கு கிரையம் கொடுத்த கிருஷ்ணன் பெயரோ கூட்டுப்பட்டாவில் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் மூலமாக நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு பாதகம் ஏற்படும் என்பதால் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. இந்த வழக்கு சொத்து வாதியின் தந்தை சுப்பிரமணி கிரையம் பெறுவதற்கு முன்பு கிருஷ்ணன் அவர்களுடைய சகோதரர்கள் சேர்ந்து அவர்கள் சகோதரிகள் லட்சுமி, வள்ளியம்மாளுக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அப்போது எனக்கு சிறுவயது. வழக்கு சொத்து 2ம் பிரதிவாதி கிரையம் வாங்குவதற்கு முன்பு யார் பயிர் செய்தது என்றால் பயிர் யாரும் செய்யவில்லை. ஏழுமலை கிரையம் வாங்கிய பின்பு யார் பயிர் செய்தது என்றால் யாரும் பயிர் செய்யவில்லை. நான் பொய்யாக சொல்லிகிறேன் என்றாலும் 2ம் பிரதிவாதி ஏழுமலை கிரையம் வாங்குவதற்கு முன்பு நான் தான் பயிர் செய்து வந்தேன் என்றாலும் அவர் கிரையம் வாங்கிவிட்டார் என்பதால் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அதில் வேலி தான் உள்ளது நான் தான் அனுபவித்து வருகிறேன்.

3. வாதியின் தந்தை கிரையம் பெறும்போது எனக்கு 14 வயது தான் என்றாலும் எனவே சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து செல்லவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரத்தை படித்து பார்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியாக ஞாபகம் இல்லை. சுப்பிரமணி கிரையம் வாங்கியபோது நான் படித்துப்பார்த்தேனா என்றால் கிரையம் வாங்கியபோது படிக்கவில்லை. 10 வருடம் கழித்து படித்துப்பார்த்தேன்.

வாதி உறவுக்காரர் என்பதால் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. மேலும் பிரதிவாதிக்கும் எனக்கும் முன்விரோதம் இருப்பதால் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. நான் உண்மைக்கு புறம்பாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.